# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8069813
C

1. District : மாவட்டம் திருவள்ளூர் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 2/2020 Date: நாள் 29/02/2020 10.00 hrs

2. (i) Act சட்டம்: CrPc Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: r/w the prevention of Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: Corruption Act 2018 (Amendment) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.2.2020 Date to : நாள் வரை 29.2.2020
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 03.00 hrs Time to : நேரம் வரை 06.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 09.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.2.2020 Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ வடக்கு திசையில்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மோட்டார் வாகன ஆய்வாளர் ஊத்துக்கோட்டை சோதனைச் சாவடி அலுவலகத்தில்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. தங்கவேலு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழிலில் Inspection cell officer. (g) Address : முகவரி காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திரு. மு. துளசிராமன் மோட்டார் வாகன ஆய்வாளர், ஊத்துக்கோட்டை ② திரு. ராமர், உதவியாளர், ③ திரு. முருகன் அலுவலக உதவியாளர், ④ K. மூர்த்தி S/o கண்ணன், NO: 2 M.A. கோவில் தெரு, செங்குன்றம் (தனிநபர்) ⑤ மகாதேவன் S/o செல்வராஜ், LIS பட்டாபிராம் (தனிநபர்) ⑥ பூபதி S/o வரதன் No: 1/157 [illegible] (தனிநபர்) ⑦ முருகன் S/o [illegible] (தனிநபர்) ⑧ திரு. ஆனந்தன் S/o [illegible] [illegible], ஜாபர்கான்பேட்டை, செ-83

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
கணக்கில் வராத தொகை ரூ 2,38,990/- திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்டது.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் N.சிமந்த்ரா.......... பதவி Inspector.. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 24/2/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் N.சிமந்த்ரா
Rank: நிலை ....... No. எண் .......
காவல் ஆய்வாளர்
VSAC, திருவள்ளூர்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**Thiruvallur V & AC, Cr.No.2/AC/2020/TLR, F.I.R contents continues for Column-12.**

திருவள்ளூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.N.சுமத்ரா ஆகிய நான் இன்று 29.02.2020 தேதி காலை 09.00 மணிக்கு நிலைய ஆஜரில் இருந்தபோது திரு.S.தங்கவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்கள் நிலையம் ஆஜராகி அவர்களது அலுவலக கடித எண்.ந.க.அ./80/2020, நாள்.29.02.2020 நாளிட்ட கடிதம் மூலமாக திருவள்ளூர் மாவட்டம் அனுப்புனர் எஸ்.தங்கவேலு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், (இருப்பு) காஞ்சிபுரம். பெறுநர் துணைக் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர் மாவட்டம், ந.க.அ.80/2020, நாள்.29.02.2020, ஐயா, பொருள் திடீர் சோதனை - திருவள்ளூர் மாவட்டம் - ஊத்துக்கோட்டை - பாலவாக்கம் வாகன தணிக்கை சோதனை சாவடி - 29.02.2020 அதிகாலை - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை செய்யப்பட்டது - அறிக்கை அனுப்புதல், திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டம், பாலவாக்கம் வாகன தணிக்கை சோதனை சாவடி 29.02.2020 அதிகாலை சுமார் 03.00 மணியளவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்களுடன் திடீர் சோதனை செய்யப்பட்டது. மேற்படி சோதனையில் கணக்கில் வராத பணம் ரூ.2,38,990/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம், திடீர் சோதனை மகஜர் செயல்முறை, சோதனை சாவடியில் பணியில் இருந்த அலுவலர்களின் மற்றும் நபர்களின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய நகல்கள் உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள sd xxxxxxx மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டம். திடீர் சோதனை செயல்முறை திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டையில் அமைந்துள்ள பாலவாக்கம் சோதனைச் சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பம் அல்லாத) அலுவலகத்தில் வாகன ஓட்டுநர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, காஞ்சிபுரம், (பொறுப்பு) திருவள்ளூர் ஆகியோர் தலைமையில் மோட்டார் வாகன ஆய்வாளர், ஊத்துக்கோட்டை சோதனைச்சாவடி அலுவலகத்தில் 29.02.2020-ந் தேதி அதிகாலை சுமார் 03.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கைகள்.

**Thiruvallur V & AC, Cr.No.2/AC/2020/TLR, F.I.R contents continues for Column-12.**

| | |
|---|---|
| ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள். | 1. திரு.எஸ்.தங்கவேலு<br>காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு), காஞ்சிபுரம். |
| | 2. திரு.T.சிவபாதசேகரன்<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம். |
| | 3. திரு.V.கணேசன்,<br>காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர்.<br>4. திருமதி.N.சுமத்ரா,<br>காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிபபுப் பிரிவு, திருவள்ளூர்.<br>5. திரு.G.அண்ணாதுரை,<br>காவல் ஆய்வாளர்,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிபபுப் பிரிவு, காஞ்சிபுரம் |

மேற்படி திடீர் கூட்டாய்வு மேற்கொண்டபோது, மேற்படி சோதனைச் சாவடியில் 1)திரு.மு.துளசிராமன், வயது-57, த/பெ.முனுசாமி, எண்.114, B பிளாக், V.G.N. ரக்ஸா அப்பார்மென்ட், முகப்பேர், சென்னை, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) அவர்களும், 2) திரு.ராமர், உதவியாளர், 3) திரு.முருகன், அலுவலக உதவியாளர், 4) திரு.கே.மூர்த்தி, வயது 58, த/பெ கண்ணன், எண்.2 எம்.ஏ.கோவில் தெரு, M.A.நகர், செங்குன்றம், சென்னை-52 (தனிநபர்), 5) திரு.மகாதேவன், வயது-45, த/பெ செல்வராஜ், எண்.L 15, பட்டாளம், வின்சஸ் லைடன், சென்னை-12 (தனிநபர்), 6)திரு.பூபதி, வயது 33, த/பெ வரதன், எண்.1/157, சின்ன தெரு, நாவலூர் கிராமம், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் (தனிநபர்), 7) திரு.முருகன், வயது 47, த/பெ வடிவேல், எண்.25, ஜி.ஆர்.நகர், சீரநாகன்பட்டி பைபாஸ், சேலம் (தனிநபர்) 8)திரு.ஆனந்தன், வயது 43, த/பெ வெங்கடேசன், எண்.6, வேலு தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை-83 (திரு.துளசிராமனின், மோட்டார் வாகன ஆய்வாளரின் தனிப்பட்ட ஓட்டுநர் TN 09 BV 4035 (Swift-Tour)), ஆகியோர்கள் பணியிலிருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான நான், மேற்படி அனைத்து அலுவலர்களுக்கும் என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை சுயசோதனை

**Thiruvallur V & AC, Cr.No.2/AC/2020/TLR, F.I.R contents continues for Column-12.**

செய்துகாட்டி. அலுவலக சோதனையை ஆரம்பித்தோம். சோதனை சாவடியில் பணி சுழற்சி பதிவேட்டு அட்டவணை பார்த்தபோது திரு.மு.துளசிராமன், மோட்டார் வாகன ஆய்வாளரும், உதவியாளர் திரு.ராமர் என்பவரும் பணியில் இருந்தனர். இன்றைய அலுவலில் இருக்கவேண்டிய அலுவலக உதவியாளர் திரு.ஏ.எஸ்.ராஜேஷ் என்பவர் விடுப்பில் சென்றதால் அவருக்கு பதிலாக திரு.ரா.முருகன் பணியில் இருந்தார். தனிநபர்கள் நான்கு பேரும் வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனை சாவடி மையத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்திருத்திக்கொண்டிருந்தனர்.

பிறகு, மேற்படி சோதனை சாவடி கண்டைனரை Interior Wood Work-ல் மர ட்ராயர்கள் செய்யப்பட்டு சோதனை சாவடி அலுவலகமாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. செக்போஸ்ட்டின் முதல் கணினியில் உதவியாளர் திரு.ராமர் என்பவர் கணினியை இயக்கிக்கொண்டிருந்தார். மேற்படி கணினியில் Account Statement கணினி பிரிண்ட் MVI அவர்களிடம் கேட்டுப் பெற்று அதில் அவரும் நானும் கையொப்பமிட்டு விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன். மேற்படி Account Statement ஐ பார்வையிட்டதில் ரசீது எண்.P9848733 முதல் P9848762 வரை 03.00 மணி நிலவரப்படி வசூல் செய்த தொகை பணமாக ரூ.33,710/- யும் மற்றும் Nation Travel மூலமாக KVB வங்கி 1) DD No.919952 – ரூ.1,76,000/-, 2) DD No.919953 – ரூ.2,47,000/- மற்றும் 3) DD No.919954 – ரூ.2,47,000/, ஆக மொத்தம் ரூ.7,03,710/-ற்கான தொகை மற்றும் காசோலை இருக்கையில் அமர்ந்திருந்த உதவியாளர் திரு.ராமர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டாவது கணினியில் கணினியின் Cannon பிரண்டர் பேப்பர் பீடிங் பாக்ஸில் 4,000/-ம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. சந்தேகம் ஏற்பட்டு கேபினின் வலது புறம் உள்ள ட்ராயாரிலிருந்து சோதனை செய்ய ஒன்றாவது ட்ராயாரில் ரூ.3,600/- இரண்டாவது ட்ராயாரில் ரூ.2,880/-ம், மூன்றாவது ட்ராயாரில் ரூ.32,400/-யும், வாட்டர் கேன் பாக்ஸிலிருந்து ரூ.15,790/-ம், அலுவலக உதவியாளர் திரு.முருகன் என்பவருடைய கருப்பு பையிலிருந்து ரூ.12,500/-ம், பூஜை அறையில் டேபில் ட்ராயாரிலிருந்து ரூ.12,450/-ம், மோட்டார் வாகன ஆய்வாளர் அமர்ந்திருந்த டேபிளை ஒட்டியுள்ள கணிணி டேபில் ட்ராயாரில் ரூ.1,50,500/-ம் இருந்தது. மேற்படி பணம் குறித்து விளக்கம் கேட்க உரிய விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் வாகன ஓட்டிநர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என கருதி மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.ஆனந்தன் என்பவரை சோதனை செய்ததில் அவரது பாக்கெட்டில் ரூ.3,520/-ம், திரு.மூர்த்தி என்பவர் பாக்கெட்டில் ரூ.1,090/-ம்,

**Thiruvallur V & AC, Cr.No.2/AC/2020/TLR, F.I.R contents continues for Column-12.**

திரு.மகாதேவன் என்பவர் பாக்கெட்டில் ரூ.210/-ம் இருந்தது. இது குறித்து அவர்களை விசாரிக்க முன்னுக்கு பின் முரணாக கூறினர். எனவே, ரூ.2,38,990/- வாகன ஓட்டிகளிடமிருந்து லஞ்சமாக பெற்ற பணமாக இருக்ககூடும் என கருதி மேற்படி பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பணியாளர் ரொக்க பண பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த பணத்தினை சோதனைக்கு பிறகு அவர்களிடம் முறையாக ஒப்படைக்கப்பட்டது மேலும், 1) பணி சுழற்சி முறை செயல்முறை ஆணை. 2) வருகைப் பதிவேடு. 3) DD ரிஜிஸ்டெர். 4) பண பரிவர்த்தனை பதிவேடு. 5) பணியாளர் ரொக்க பதிவேடு, 6) காலதாமத வருகை பதிவேடு, 7) செக் ரிபோர்ட் புக் (28.02.2020) (S.No.1788402 to 1788407), 8) வருவாய் வசூல் வங்கியில் செலுத்தும் பதிவேடு ஆகிய பதிவேடுகளை பார்வையிட்டு நகல் எடுத்து கையொப்பம் பெற்று விசாரணைக்காக பெறப்பட்டது. நான் அத்தாட்சி செய்து, ஆஜரில் இருந்த திரு.துளசிராமன், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடமும் அத்தாட்சி பெற்று, மேற்படி நகலினை பெறப்பட்டது. மேலும் 3 DDக்களின் நகல் எடுத்து அதில் நானும், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களும் அத்தாட்சி செய்து நகல் பெறப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது ஆஜரிலிருந்த சோதனை சாவடி அலுவலர்கள் மற்றும் அலுவலகத்தில் இருந்த தனிநபர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்யப்பட்டது. தனிநபர் நான்கு நபர்களும் தினக்கூலியாக வேலை செய்வதாகவும். வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனை சாவடிக்கு செல்லுமாறு சொல்வதாகவும். அதற்காக நாள் ஒன்றுக்கு ரூ.400/- முதல் ரூ.600/- வரை அப்போது பணியில் இருக்கும் ஆய்வாளர் வசூல் செய்யும் லஞ்ச பணத்தில் கூலியாக தருவார் என்றும் கூறினார்கள். தனிநபர் திரு.ஆனந்தன் என்பவர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.துளசிராமன் அவர்களுக்கு தனிப்பட்ட ஓட்டுநராக வேலை செய்வதாகவும், அவர் மீஞ்சூரிலிருந்து ஊத்துக்கோட்டைக்கு வந்து செல்ல மேற்படி காரின் ஓட்டுநராக உள்ளதாக தெரிவித்தார். கைப்பற்றப்பட்ட பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் வாகன ஓட்டுநர்களிடமிருந்து லஞ்சமாக பெறப்பட்டு மறைத்து வைக்கப்பட்டது என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவ்வாறு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் (ரூ.2000x12=ரூ.24,000/-, ரூ.500x387=ரூ.1,93,500/-, ரூ.200x41=ரூ.8,200/-, ரூ.100x86=ரூ.8,600/-, ரூ.50x82=ரூ.4,100/-, ரூ.20x5=ரூ.100/-, ரூ.10x49=ரூ.490/-) ஆகமொத்தம் ரூ.2,38,990/- ஆகும். அனைத்து நடவடிக்கைகளும் இன்று 29.02.2020-ந்தேதி அதிகாலை 03.00 மணிக்கு துவங்கி, 06.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

**Thiruvallur V & AC, Cr.No.2/AC/2020/TLR, F.I.R contents continues for Column-12.**

ஒப்பம் xxx
திரு.எஸ்.தங்கவேலு
காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர்
மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் (இருப்பு),
காஞ்சிபுரம்

ஒப்பம் xxx
திரு.G.அண்ணாதுரை,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்

ஒப்பம் xxx
திரு.V.கணேசன்,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
திருவள்ளூர்.

ஒப்பம் xxx
திருமதி.N.சுமத்ரா,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
திருவள்ளூர்.

ஒப்பம் xxx
திரு.T.சிவபாதசேகரன்,
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம். I/C திருவள்ளூர்

அய்யா, மேற்படி கடித்த்தினை D.S.P.,V&AC காஞ்சிபுரம் (i/c) திருவள்ளூர் அவர்களின் உத்தரவுப்படி V&AC/TLR. Cr.No.2/AC/2020/TLR. U/S 102 Cr.P.C. r/w 7 of Prevention Corruption (Amendment) Act 2018-ல் 29.02.2020 அன்று 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் திடீர் சோதனை செயல்முறை மற்றும் எதிரிகளின் வாக்குமூலங்களை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

29/2/2020
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவள்ளூர்